**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.**

முன்னிலை: திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருச்சுழி.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ம் நாள் செவ்வாய்கிழமை

**சுருக்கு விசாரணை வழக்கு எண்.107/2024**

**CNR.No.TNVR200006922024**

*****

| | | |
|---|---|---|
| 1. | நீதிமன்றத்தின் பெயர் | மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி. |
| 2. | நீதித்துறை நடுவரின் பெயர் | திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L., |
| 3. | தீர்ப்பு தேதி | 24.03.2026 |
| 4. | சி.எண்.ஆர்.எண் | TNVR200006922024 |
| 5. | வழக்கின் தரப்பினர்களின் பெயர் | அரசு தரப்பில் திருச்சுழி காவல் நிலைய சார்பு ஆய்வாளர்,<br>குற்ற எண்.78/2024<br>/எதிர்/<br>வினேத்குமார் – (21/23)<br>த/பெ.கணேசன்,<br>3/71, கிழக்குத்தெரு,<br>P.M.புதுப்பட்டி,<br>திருச்சுழி தாலுகா,<br>விருதுநகர் மாவட்டம். |
| 6. | சம்பவம் நடந்த நாள் | 09.03.2024 |
| 7. | புகார் கொடுத்த நாள் | 12.03.2024 |
| 8. | கைது செய்யப்பட்ட தேதி மற்றும் ரிமாண்ட் ஏதேனும் இருந்தால் | எதிரி கடந்த 12.03.2024 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு அன்றைய தினமே நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| 9. | குற்றம் சாட்டப்பட்டவரின் காவல் காலம் | இல்லை |

<table>
<tr><td>10.</td><td>ஜாமீனில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td>எதிரி கடந்த 12.03.2024 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு அன்றைய தினமே நிலைய பிணையில் சென்றுள்ளார்.</td></tr>
<tr><td>11.</td><td>குற்ற இறுதியறிக்கை நாள்</td><td>12.03.2024</td></tr>
<tr><td>12.</td><td>வழக்கு மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்ட நாள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>13.</td><td>குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 281–ன் கீழ் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரை விசாரித்த நாள்</td><td>10.07.2025</td></tr>
<tr><td>14.</td><td>சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம்</td><td>
<table>
<tr><th></th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>09.03.2026</td><td>09.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>09.03.2026</td><td>09.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>09.03.2026</td><td>09.03.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>13.03.2026</td><td>13.03.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>15.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட</td><td>குவிமுச பிரிவு 311–ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 13.03.2026 ம் தேதியன்று M.P.No.10/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அன்றைய தினமே அனுமதி செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>16.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 313–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவரை கேள்வி கேட்ட நாள்</td><td>18.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>குற்றஞ்சாட்டப்பட்டவர் தலைமறைவான தேதி, பிடிபட்ட/ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்)</td><td>எதிரி கடந்த 12.03.2024 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு அன்றைய தினமே நிலைய பிணையில் சென்றுள்ளார்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 18. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | இல்லை |
| 19. | விசாரணை தொடங்கிய நாள் | 29.08.2025 |
| 20. | விசாரணை முடிந்த நாள் | 18.03.2026 |
| 21. | தண்டனை அல்லது உத்தரவு நாள் | 24.03.2026 |
| 22. | குற்றவாளிக்கு தீர்ப்பின் நகலை வழங்கிய நாள் | விடுதலை தீர்ப்பு அதனால் நகல் வழங்கப்படவில்லை |
| 23. | தாமதம் ஏற்பட்டால் விளக்கம் அளிக்கவும் | தாமதம் இல்லை. |

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசு தரப்பில் திருச்சுழி காவல் நிலைய சார்பு ஆய்வாளர்,<br>குற்ற எண்.78/2024 |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | எதிரி மீது பிரிவு 294(பி) இதச–ன் கீழ் சாட்டப்பட்டுள்ளது. |
| நீதிமன்றத்தால் எதிரி மீது வனையப்பட்ட குற்றம் | எதிரி மீது பிரிவு 294(பி) இதச–ன் கீழ் வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் பதில் | பொய் வழக்கு |
| நீதித்துறை நடுவரின் பதில் | எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, எதிரி பிரிவு 294(பி) இதச–ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, எதிரியை |

| | |
|---|---|
| | கு.வி.மு.ச. பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – I | திரு.செந்தில்குமார்,B.A.,B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.R.சேகர்,M.A(Hon's).,B.L., |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 18.03.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 24.03.2026 |

இவ்வழக்கு கடந்த 25.04.2024–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் எஸ்.டி.சி.107/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 18.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 திரு.செந்தில்குமார்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சேகர்,M.A(Hon's).,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>தீர்ப்புரை</u>

1. திருச்சுழி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எதிரி மீது பிரிவு 294(பி) இதச–ன் கீழ் குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>:–

புகார்தாரர் கடந்த 09.03.2024ம் தேதி மாலை சுமார் 16.00 மணியளவில் குடும்பத்தாருடன் கோவிலுக்கு செல்வதற்காக தனது

வீட்டிற்கு முன்பு நின்றிருந்ததாகவும், அங்கு வந்த எதிரி புகார்தாரரைப் பார்த்து ஏண்டா தேவிடியா மகனே என்ன பார்த்து முறைக்கிற என பொது இடத்தில் வைத்து புகார்தாரரை அசிங்கமாக திட்டி குற்றம் புரிந்துள்ளதாக திருச்சுழி காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் எதிரி மீது பிரிவு 294(பி) இதச–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கையை கோப்பிற்கு எடுத்த இந்நீதிமன்றம் எதிரியின் குற்றச்செயல் குறித்து அடிப்படை முகாந்திரம் இருப்பதாக கருதியதால் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பியது. அழைப்பாணையின் பேரில் எதிரி இந்த நீதிமன்றத்தில் ஆஜராகினார். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

4. எதிரிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. எதிரியின் கருத்தும் கேட்கப்பட்டது. எதிரி குற்றம் புரிந்தார் என்று அனுமானிக்க போதிய காரணங்கள் இருப்பதாக தெரிய வரவே எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்துரைத்தார்.

5. எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீது வனையப்பட்ட குற்றத்தை நிரூபணம் செய்யும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப் படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு

செய்யப்படவில்லை. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சான்று பொருள் எதுவும் முன்னிடப்படவில்லை.

**6.<u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்</u>:–**

6(1). அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் சம்பவம் குறித்தும், நடவடிக்கை எடுக்கக் கோரி காவல் நிலையத்தில் புகார் மனு **அ.சா.ஆ.1** கொடுத்தது குறித்தும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

6(2). அ.சா.2, அ.சா.3 இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகள் ஆவர். இவர்கள் தங்களது சாட்சியத்தில் சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்தும், எதிரியை சத்தம் போட்டு அனுப்பிவிட்டது குறித்தும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர்.

6(3). அ.சா.4 சார்பு ஆய்வாளர் திரு.அருண்குமார் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். இவர் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.வீரணன் என்பவரின் கையெழுத்தும், கையொப்பமும் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சார்பு ஆய்வாளர் திரு.வீரணன் கடந்த 12.03.2024 ம் தேதியன்று நிலைய பொறுப்பில் இருந்தபோது, காளிமுருகன் (வயது 42) த/பெ.மதுரைவீரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.78/2024, இதச பிரிவு 294(b)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார்மனு ஆகியவற்றின்

அசல் மற்றும் நகல்களை கனம் நீதித்துறை நடுவருக்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ சாட்சிகள் காளிமுத்து, சுப்புராஜ், பழனி, வீரணன் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து குவிமுச பிரிவு 161(3)–ன்படி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 12.03.2024 ம் தேதியன்று நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க இருநபர் ஜாமீன்தாரர்கள் மூலம் நிலைய பிணையில் விடுவித்துள்ளார் என்றும், இவ்வழக்கின் சட்டப்பிரிவு 294(பி) மட்டுமே என்பதால் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வழக்கிற்கு அவசியமில்லை என தயார் செய்யவில்லை. பின்னர் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் தனது புலன் விசாரணையை அன்றைய தினமே முடித்து எதிரி மீது இதச பிரிவு 294(b)–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் விளக்கி கூறி குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது, எதிரி அவை அனைத்தும் பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கும் பொய் வழக்கென்று மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிப்பதற்கு சாட்சி இல்லை என்று கூறப்பட்டு இருதரப்பு சாட்சியங்கள் முடித்து வைக்கப்பட்டது.

8. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன.

9. அரசுத்தரப்பு கற்றறிந்த குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 அவருடைய வாதத்தின்போது அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், சாட்சியங்கள் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்வதற்கு

போதுமானதாக உள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களுடைய வாதத்தில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**11. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>:-**

எதிரிக்கு எதிராக வனையப்பட்ட இதச பிரிவு 294(பி)-ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதா?

**12.<u>பரிசீலனையும் தீர்வும்</u>:-**

12(1). கடந்த 09.03.2024ம் தேதியன்று எதிரி புகார்தாரரை பொது இடத்தில் அசிங்கமாக திட்டி குற்றம் புரிந்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**i)** <u>எதிரிக்கு எதிராக வனையப்பட்ட இதச பிரிவு 294(பி)-ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பார்வையிடுகையில்,</u>

12(2). இவ்வழக்கின் புகார்தாரரான காளிமுருகன் தனது புகார் மனுவில் "கடந்த 09.03.2024ம் தேதி நானும் என் குடும்பத்தாரும் கோவிலுக்கு செல்வதற்காக மாலை 4.00 மணியை போல என் வீட்டிற்கு வெளியே நின்றிருக்கும் போது P.M.புதுப்பட்டியை சேர்ந்த கணேசன் மகன்

வினோத்குமார் என்பவர் என்னை ஏன்டா தேவிடியா மகனே ஏன்டா என்னை பார்த்து முறைக்கிறாய் என என்னை அசிங்கமாக திட்டினார்" என புகார்மனு அளித்துள்ளார்.

12(3). ஆனால் அ.சா.1 காளிமுருகன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் **"கடந்த 19.04.2024ம் தேதியன்று குலதெய்வத்தை கும்பிடுவதற்காக கோயமுத்தூரில் இருந்து புதுப்பட்டிக்கு வந்திருந்தேன். 15 வயது மதிக்கத்தக்க எனது மகளை மாலை 4 மணியளவில் கோவில் முன்பாக வைத்து ஆஜர் எதிரி தேவுடியா மகளே என்று அசிங்கமாக பேசினார்"** என்று கூறி அரசு தரப்பில் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

12(4). மேற்படி புகார்தாரர் தனது புகார்மனுவில் எதிரி தன்னை பொது வெளியில் அசிங்கமாக திட்டியதாக கூறி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக தெரிவித்துள்ள நிலையில், தனது மகளை எதிரி பொது வெளியில் அசிங்கமாக திட்டியதாக தனது புகார்மனுவிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி முரண்பாடான சாட்சியத்தினை கொண்டு எதிரி குற்றம் புரிந்தார் என்று முடிவுக்கு வர இயலாது. மேலும் எதிரி அ.சா.1 ஐ அசிங்கமாக பேசினாரா? அல்லது அவரது மகளை அசிங்கமாக பேசினாரா? என்று அரசு தரப்பில் தெளிவான விளக்கத்தினை அளிக்கவில்லை.

12(5). மேலும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 சுப்புராஜ் மற்றும் அ.சா.3 பழனி தங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் "வழக்கு பற்றி தனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று கூறி அரசு தரப்பில் பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர்.

12(6). இவ்வழக்கினை பொறுத்த வரையில் புகார்தாரரான அ.சா.1, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரி புகார்தாரரை பொது வெளியில் அசிங்கமாக திட்டியதாக எந்தவித சாட்சியம் அளிக்கவில்லை.

12(7).மேலும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294 ஆனது பின்வருமாறு:

> "294. Obscene acts and songs —Whoever, to the annoyance of others— (a) does any obscene act in any public place, or (b) sings, recites or utters any obscene song, ballad or words, in or near any public place, shall be punished with imprisonment of either description for a term which may extend to three months, or with fine, or with both."

12(8). இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294(பி)–ன் கீழ் ஒருவரை தண்டிக்கவேண்டுமெனில், அந்த குற்றம் கீழ்கண்ட இரண்டு உட்கூறுகளும் நிறைவு செய்திருக்க வேண்டும்.

**i)**. எதிரி அசிங்கமான வார்த்தையைச் சொல்லி திட்டும்போது மேற்படி வார்த்தையால் மற்றவர்களுக்கு அருவறுப்போ அல்லது அசிங்கமோ ஏற்பட்டிருக்க வேண்டும்.

**ii)**. மேற்படி ஆபாசமான வார்த்தையானது பொது இடத்திலோ அல்லது பொது இடத்திற்கு அருகிலோ சம்பந்தப்பட்ட எதிரியால் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

12(9). மேலும் இது குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **K.Jeyaramanuju Vs. Janakaraj & anr., 1996(1) CTC 470 Dt.15.02.1996** வழக்கில்

> "To prove the offence under Section 294 of IPC mere utterance of obscence words are not sufficient but there must be a further proof to establish that it was to the annoyance of others, which is lacking in the case."

என தெரிவித்துள்ளது.

12(10).மேற்படி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் படி பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகள் உபயோகிப்பது மட்டும் பிரிவு 294(பி) இதச–ன் கீழ் தண்டணைக்குரிய குற்றம் ஆகாது. அந்த வார்த்தையினால் மற்றவர்களுக்கு அருவறுப்போ, அசிங்கமோ ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதும் அதற்கான முக்கிய உட்கூறாகும் என்பது தெளிவாகிறது.

12(11). இவ்வழக்கினை பொறுத்தவரை அரசு தரப்பு வழக்கின் படி எதிரி அ.சா.1 புகார்தாரரின் மகளை அசிங்கமாக பொது வெளியில் திட்டியதாக வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும், அந்த அசிங்கமான வார்த்தைகளால் மற்றவர்களுக்கு அசிங்கமோ அல்லது அருவறுப்போ ஏற்பட்டதாக எந்தவித சாட்சியமும் அரசு தரப்பில் அளிக்கப்படவில்லை. மேலும் அரசு தரப்பில் சம்பவத்திற்கு கண்ணுற்ற சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 பிறழ்சாட்சியாகியுள்ள நிலையில், தங்களுக்கு அருவறுப்பு ஏற்பட்டதாக எந்த வார்த்தையும் தனது சாட்சியத்தில் அளிக்காத நிலையில் எதிரி 294(பி) இதச–ன் கீழ் குற்றம் புரிந்தார் என்று முடிவு செய்ய இயலாது.

12(12). மேலே கண்ட விவாதங்களின் படி எதிரிக்கு எதிராக வனையப்பட்ட இதச பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டினை அரசு

தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி இதச பிரிவு 294(பி)–ன் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12(13). மேலே விரிவாக விவரிக்கப்பட்ட விவாதங்களின் அடிப்படையில் எதிரிக்கு எதிராக வனையப்பட்ட இதச பிரிவுகள் 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டினை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி இதச பிரிவு 294(பி)–ன் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**13. இறுதியாக,**

எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, எதிரி பிரிவு 294(பி) இதச–ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

**14.** இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சான்று பொருட்கள் குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

*இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு* ***2026ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம்*** நாளாகிய இன்று திறந்த *நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

*ஒம்/–S.வேல்சூர்யா (24.03.2026)*

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | காளிமுருகன் |
| அ.சா.2 | சுப்புராஜ் |
| அ.சா.3 | பழனி |
| அ.சா.4 | திரு.அருண்குமார் (சார்பு ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :–** இல்லை.

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணம், சான்றுபொருள்:–** இல்லை

*ஓம்/–S.வேல்சூர்யா (24.03.2026)*
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

<u>குறிப்பு</u>:–

1. எந்த ஒரு சாட்சியும் விசாரணைக்கு 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கின் விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
4. எதிரி கடந்த 12.03.2024ம் தேதியன்று கைது செய்யப்பட்டு அன்றைய தினமே நிலைய பிணையில் சென்றுள்ளார்.
5. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சான்று பொருட்கள் குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.